பக்கங்கள்:12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 31 | வெள்ளிக்கிழமை | 16.08.2024 | கதிர் 282

# ஜனாதிபதி விகாரையில் சஜித் இந்து ஆலயத்தில்

## வேட்புமனு தாக்கலின் பின் ஆசி பெற்றனர்

வேட்புமனுக்களை நேற்றுக் கையளித்த பின்னர் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் சமய வழிபாடுகளில் ஈடுபட்டனர். ரணில் பௌத்த ஆலயங்களிலும் சஜித் இந்து ஆலயத்திலும் ஆசி பெற்றுக்கொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, வரலாற்று சிறப்புமிக்க கண்டி தலதா மாளிகைக்குசென்றுமதவழிபாடுகளில் ஈடுபட்டு ஆசி பெற்றார்.

தலதா மாளிகைக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை, தியவடன நிலமே பிரதீப் நிலங்க தேல வரவேற்றார். பின்னர் தலதா மாளிகையின் மேல்மாடிக்கு சென்ற ஜனாதிபதி, மத வழிபாடுகளில் ஈடுபட்டார். தலதா மாளிகைக்கு வருகை தந்திருந்த மக்களிடம் நலன் விசாரித்த ஜனாதிபதி அவர்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

பின்னர் மல்வத்து மகா 2

# இனிது ரகசியம் அல்ல!

தமிழ்தேசியப்பொதுக்கட்டமைப்பு உள்ளே உளுத்துப் போய்விட்டது தெரிந்த சங்கதி. நடிகர் வடிவேலு சொல்வதைப் போன்று 'பாடி ஸ்ட்ராங்கு; பேஸ்மன்ட் வீக்கு...'' என்றகதையாகநகர்ந்துவருகின்றது இந்தக் கட்டமைப்பு.

பொது வேட்பாளராக நிறுத்தப்பட்ட அரியேந்திரன் நேற்று வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். அவர் விரும்பிய சங்குச் சின்னம் அவருக்கு வழங்கப்பட்டது. "சங்கே முழங்கு'' என்று வீரவசனத்திற்கு வசதியாக இருக்கும் என்று அந்தச் சின்னத்தை எடுத்திருப்பார்கள் போலும். போ-லும் என்ன அந்த அடைமொழிகளுடன் சமூக ஊடகங்களில் நேற்றே பதிவுகளைப் பார்க்க முடிந்தது. அதேநேரம் அரியத்துக்கும் தமிழ் பொது வேட்பாளருக்கும் சங்கூதப் போகிறார்கள், அதாவது அவர்களுக்குச் சமாதிதான் என்பதற்கான அடையாளமாகத்தான் சங்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்கிற எள்ளலையும் காண முடிகின்றது.

அரியேந்திரனுக்காகக் கட்டுப்பணம்செலுத்துதல், வேட்புமனு தாக்கல்செய்தல், சங்குச்சின்னத்தைப் பெறுதல் என்று எல்லாவற்றுக்கும் தமிழ்மக்கள் கூட்டணிதான் கூட 2

# தேர்தல் காலத்தில் செய்யக்கூடாதவை

ஜனாதிபதித் தேர்தலுக்கான காலம் நேற்று உத்தியோகபூர்வமாகத் தொடங்கியுள்ளது. இந்தக் காலப் பகுதியில் கட்சி வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் செய்யக்கூடாத நடவடிக்கைகள் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல் காலங்களில் இடம்பெறும் சட்டவிரோத செயல்கள், தவறுகள், ஊழல்கள் மற்றும் உத்தரவுகளை மீறினால் தண்டனை விதிக்கப்படும். ஜனாதிபதிதேர்தல்சட்டம்அரசியலமைப்பு சட்டத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ளது, மேலும்சிலதவறுகளுக்கானதண்டனை தேர்தல்களில் போட்டியிட முடியாத நிலை மற்றும் குடியுரிமை இழப்பும் என்பவற்றை ஏற்படுத்தும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.எல். ரத்நாயக்க 8

# வேட்பாளர்களின் பெயர் விவரங்கள்

2024 ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் நேற்று ஏற்கப்பட்டன. அவைஏற்கப்பட்ட பின்னர் முன்வைக்கப்பட்ட மூன்று ஆட்சேபனைகள் நிராகரிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது.

அதன்படி, கட்டுப் பணம் செலுத்திய 40 பேரில் 39 வேட்பாளர்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர்களின் பட்டியல் பின்வருமாறு

01. திலித் சுசந்த ஜயவீர

02. சரத் மனமேந்திர

03. அபூபக்கர் மொஹமட் இன்பாஸ்

04. எஸ். பி. 8

# நாட்டு மக்களின் எதிர்காலத்தை பாதுகாக்க ஆணை தாருங்கள்

## வேட்பு மனு தாக்கலின் பின்னர் ரணில் கோரிக்கை

இலங்கையை மீட்கத் தாம் ஆரம்பித்துள்ள இந்த வேலைத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதன் மூலம் இந்நாட்டு மக்களின் எதிர்காலத்தை பாதுகாக்க செப்டம்பர் 21 ஆம் திகதி எனக்கு மக்கள் ஆணையைத் தாருங்கள் என்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இராஜகிரிய தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று வேட்புமனு தாக்கல் செய்ததன் பின்னர் அங்குகூடியிருந்த ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நான் நாட்டை பொறுப்பேற்ற 2022 ஜூலை மாதத்தில் ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி அலுவலகம் அலரிமாளிகை, பிரதமர் அலுவலகம் எனபன முற்றுகையிடப்பட்டதுடன் எனது வீட்டிற்கும் தீவைக்கப்பட்டது.

அப்போது, தேர்தலை நடத்துவது ஒருபுறமிருக்க, ஆட்சிகொண்டுநடத்துவதும் சாத்தியமற்றதெனபலர் 2

# எந்தவொரு வேட்பாளரும் ரணிலுக்குச் சவாலில்லை

## முன்னாள் எம்.பி. ஆஷூ மாரசிங்க கருத்து

வேட்புமனு தாக்கல் செய்துள்ள வேட்பாளர்களில் நாட்டின் எதிர்காலத்துக்காக முன்வந்திருக்கும் ஒரே வேட்பாளர் ரணில் விக்ரமசிங்க மாத்திரமாகும். அதனால் எந்த வேட்பாளரும் ரணில்விக்ரமசிங்கவுக்கு சவாலாகப்போவதில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆஷூ மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

ஜனாதிபதித்தேர்தலுக்காக நேற்றையதினம் 39 வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்தார்கள். இந்த வேட்பாளர்களில் நாட்டுக்காக முன்வந்திருக்கும் ஒரே வேட்பாளர் ரணில் விக்ரமசிங்க மாத்திரமாகும். ஏனைய வேட்பாளர்கள் அனைவரும் பல்வேறு சுயநல காரணங்களுக்கே போட்டியிடுகின்றனர்.

அதனால் நாட்டின் எதிர்காலம், மக்களின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்துசெயற்பட்டு 8

# ஒற்றையாட்சியை காக்க பெரமுனவே வேண்டும்

## வேட்புமனு தாக்கல் செய்ததும் விசம் கக்கிய நாமல்

நாட்டின் ஒற்றையாட்சி மற்றும் தேசிய உற்பத்தி ஆகியவற்றை எம்மால் மாத்திரமே பாதுகாக்க முடியும். தேர்தலில் நிச்சயம் வெற்றிப் பெறுவோம். கொள்கையை முன்னிலைப்படுத்தி செயற்படுவதால் எவரும் எமக்கு சவாலல்லர் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச 2

## பொது வேட்பாளர் விடயத்தில்

# தமிழ் அரசுக் கட்சி விரைவில் உரிய முடிவு எடுக்கவேண்டும்

## விக்னேஸ்வரன் எம்.பி. கோரிக்கை

தமிழ் வேட்பாளர் விவகாரத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி உறுதியான தீர்மானத்தை எடுக்காமல் இருப்பது கவலைக்குரியது. தமிழர்களின் எதிர்காலத்தைகருத்திற்கொண்டு விரைவானதீர்மானத்தை எடுக்கவேண்டும் என்பதைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன் என தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன் 8

# தமிழ் மக்களின் ஒற்றுமையை காட்டவே போட்டியிடுகின்றேன்

## அரியநேந்திரன் சுய விளக்கம்

தேர்தலில் வெற்றிப் பெறுவதற்காகபோட்டியிடவில்லை, தமிழ்மக்களின் ஒற்றுமையை ஒரு சக்தியாக இலங்கை அரசுக்கும், சர்வதேசத்துக்கும் காண்பிப்பதற்காகவே போட்டியிடுகிறேன் என தமிழ் பொதுவேட்பாளரான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

தேர்தல்கள்ஆணைக்குழுவில் நேற்று இடம் பெற்ற வேட்புமனு கையளிப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கள அரச தலைவர்களுடன் பேச்சு நடத்தவில்லை, கடந்த காலபேச்சுக்கள்தோல்வியடைந்துள்ளன. இதன் காரணமாகவே இம்முறைதனித்துபோட்டியில்இறங்கியுள்ளோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நாங்கள் பேச்சுநடத்தவில்லை. தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் ஒரு தரப்பினர் பேச்சு ஈடுபட்டுள்ளார்கள். யோசனைகள்முன்வைக்கப்பட்டு அவை பரிசீலிக்கப்படுகின்றன.

எமது தேர்தல் அறிக்கையை வெகு விரைவில் வெளியிடுவோம். அத்துடன்தேர்தல் பரப்புரைகளையும் முன்னெடுப் 2

# மேலும் 5 எம்.பிக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு

ஜனாதிபதித் தேர்தலில் 'காஸ் சிலின்டர்' சின்னத்தில்போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேலும் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைநேற்றுச் சந்தித்த ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.வேலுகுமார், பொதுஜன பெரமுன மொனராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் கயாஷான் 2

## இனி இது .....

இருந்து உதவியது. ஒற்றுமையின் சின்னமாகவெடித்துக்கிளம்புவோம் என்று பொது வேட்பாளர் ஆராவாரத்தின் ஐக்கிய ஜோதிக்குள் கலந்தவர்களில் வேறு எவரும் அவருக்கு ஆதரவாக கொழும்பில் இல்லை. ரெலோ, புளொட் அரியேந்திரனுடன் தலையைக் காட்டிக்கொள்ள முடியாத நிலையில் மாட்டிக்கொண்டிருக்கின்றன. அவை சஜித் பிரேமதாஸவைச் சந்தித்ததற்கே 'சாராயக்கடை லைசன்ஸ்' எஜமான் தரப்பிடமிருந்து வாக்கிக் கட்டிக்கொண்டனர் என்று கேள்வி. இனியும்இந்தமாதிரிதகிடுதத்தங்கள் விட்டால் 'சாராய லைசன்ஸ்' எடுப்பதற்காக கையெழுத்து வைத்ததுஉள்ளிட்ட அதிஉத்தமரிடம் இருந்தபெற்றவற்றையும்வழங்கிய வாக்குறுதிகளையும் வெளியே விட்டுவிடுவோம் என்றுவேறு மிரட்டுகிறார்களாம். என்னசெய்வது செஞ்சோற்றுக் கடன், அவர்களால் வரமுடியவில்லை. ஆனால் கட்சிகளுக்கு சமமான அந்தஸ்து வேண்டும் என்று கேட்ட தமிழ் மக்கள் பொதுச் சபைக்காரர்களில் ஒருவரையும்கூடக் கொழும்பில் காணமுடியவில்லை.

அதற்கும்ஒருகாரணம்உண்டு என்று சொல்கிறார்கள். தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தினால் புலம்பெயர் தமிழர்களிடம் இருந்து பணம்கூரையைப்பிய்த்துக்கொண்டு கொட்டும் என்று தொடக்கத்தில் சொல்லப்பட்டதாம். டொலர்களாவும் பவுண்ஸ்ஸுகளாகவும் கொட்டும் என்று விளக்கமளிக்கப்பட்டதாம். ஆனால், இப்போது பார்த்தால் எதிர்பார்த்த அளவிற்கு எதுவும் நடக்கவில்லை.பொதுவேட்பாளருக்கு ஆதரவாக ஆங்காங்கே ஏதாவது பரப்புரைகளையாவது நடத்துவதற்காவது போதிய நிதி கிடைக்குமாக என்று ஏங்கி இருக்கவேண்டிய நிலைதான் இப்போது வரைக்கும் இருக்கின்றதாம். அதனால் வேட்புமனுத்தாக்கலில்பொதுச்சபைக்காரர்களால் தமது சம அந்தஸ்தைப் பேண முடியாமல் போயிருக்கக்கூடும்.

எது எப்படியோ தமிழ் பொது வேட்பாளரால் நன்மை அடைந்த ஒரே கட்சி தமிழ் அரசுக் கட்சிதான். அந்தக் கட்சிதான் தமிழர்களின் முதன்மையானகட்சி, தமிழர்களின் மனங்களில் உறுதியான முடிவை எட்டவேண்டுமானால்தமிழ் அரசுக் கட்சி இன்றி அது முடியாது என்பதை தமிழர்களின் ஆழ்மனத்தில் ஆணி அடித்துப் பதியவைத்திருப்பது மட்டும்தான்தமிழ்பொதுவேட்பாளர் செய்திருக்கும் கைங்கரியம்.

நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்தபின்னர்கூட, தமதுவேட்பாளர் விடயத்தில் தமிழ் அரசுக் கட்சி விரைந்து முடிவெடுக்கவேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு வாசலில் நின்றே கோரிக்கை விடுத்திருக்கின்றார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர், நாடாளுமன்றஉறுப்பினர்விக்னேஸ்வரன். போதாதத்கு தமிழ் அரசுக் கட்சிக்குள் சிலர் மட்டுமே தமிழ் பொது வேட்பாளர் தெரிவுக்கு எதிர்ப்பு மற்றவர்கள் எல்லோரும் ஆதரவு என்றுவேறு கருத்துச் சொல்லியிருக்கிறார்.

அவரதுகருத்துஉண்மையாயின் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியின் பெரும்பான்மையானோர் தமிழ் பொதுவேட்பாளருக்கேவாக்களிக்கப் போகிறார்கள். பிறகெதற்கு கட்சியின் முடிவு? கட்சித் தலைமைப்பீடம் என்ன முடிவெடுத்தால் என்ன, உங்கள்கூற்றுப்படிதான்பெரும்பாலானவர்கள் அரியேந்திரனுக்கு ஆதரவாயிற்றே! பிறகெதற்கு கட்சித் தலைமையின் முடிவுக்காக நீங்கள் தரையில் புரண்டு அழுகிறீர்கள். கிடக்கிறது கழுதை, அதுஎதையாவதுசெய்துமுடிக்கட்டும் என்றுவிட்டு உங்கள் காரியத்தில் கண்ணாகவேண்டியதுதானே.

அது முடியாது என்பதும், தமிழ் அரசுக்கட்சிசொல்லாமல்தமிழர்களின் பெரும்பான்மையானவர்கள்பொது வேட்பாளருக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்பதும் விக்னேஸ்வரனுக்கும் மற்றவர்களுக்கும் நன்கு தெரியும்; புரியும். தங்கள் சொல் ஒரு அளவுக்கு மேல் அம்பலம் ஏறாது என்பதும் அவர்களுக்குத் தெரியும். அதனால்தான்அவர்கள்தமிழ்அரசுக் கட்சியை தமக்குள் இழுத்துவிட மீண்டும் மீண்டும் தலையால் கிடங்கு கிண்டுகின்றார்கள்.

தமிழ் அரசுக் கட்சிக்கு இதுபோதுமே, தான் இழந்த இடத்தையும் மவுசையும் மீண்டும் மற்றவர்களே தூக்கிக் கீரிடமாகத் தலையில்வைக்கும்போது அது ஏன் கலங்கப் போகிறது. எனவேதான் கடந்தமத்தியகுழுக்கூட்டத்திலேயே ஒரு கருத்துக்கு அது இணங்கி வந்திருக்கிறது. அதாவது தமிழ் பொது வேட்பாளருக்கு வெளியே தமிழ் அரசுக்கட்சி நிற்கவேண்டியது அவசியம்என்கிறகருத்துத்தான்அது.

அதற்காக ஒரு காரணமும் சொல்லப்பட்டிருக்கின்றது. 1977இல் தமிழ் விடுதலைக் கூட்டணி உருவான பின்னர் தமிழர் தரப்பில் எதிர்க்கட்சி என்றொண்டே இல்லை. அன்றைய அரசியல் சூழலில் தமிழீழம் பெற்றுத்தருவேன் என்று பின்னாளில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவராக வந்தவரான அஷ்ரப்பே முழுக்கமிட்டுக்கொண்டிருந்தார். தொண்டமான் தங்கள் வழி தனியானது என்று நகர்ந்தாலும் வடக்கு கிழக்கில் கூட்டணியின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாக இருந்தார். அப்படியிருந்தபோதும்கூட வடக்கு கிழக்கில் 50 சதவீதம் தமிழர்களின் ஆதரவைக்கூட அந்தத் தேர்தலில் கூட்டணியால் திரட்ட முடியவில்லை. இதைச் சுட்டிக்காட்டி அப்போதைய பிரதமர் ஜே.ஆர்.ஜெவர்த்தன எழுதிய கடிதத்திற்குப் பதிலளித்த அமிர்தலிங்கம், புத்தளத்தில்விழுந்த முஸ்லிம்களின் வாக்குகளையும் கணக்கில்காட்டி 50 சதவீதத்திற்குச் சொற்பம் அதிகமாகவே ஆதரவுத் தளத்தை காட்டமுடிந்தது. இன்றோ தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் புறக்கணி என்கிறது, ஈபிடிபி, கருணா, பிள்ளையான், வியாழேந்திரன் ஆகியோர் ரணிலுக்கு ஆதரவு என்கிறார்கள், சஜித்தின் கட்சி தனக்கான வாக்குத்தளம் ஒன்றை உருவாக்கப் பார்க்கிறது. அங்கஜன் அதற்கு ஆதரவாக இருக்கின்றார். இப்படிப்பட்ட நிலையில் தமிழ் பொது வேட்பாளர் தமிழர்களில் பெரும்பாலானவர்களின்ஆதரவைப் பெறுவது குதிரைக்கொம்பு. எனவே தமிழர்களின் ஆகப் பெரிய கட்சியாவது அந்த முடிவை ஆதரிக்கவில்லை என்று இருந்தால்தான், நாளை அந்தக் கருத்தை முன்வைத்து கொழும்பில்ஆளும்தரப்புக்களுடன் பேசவோ, தமிழர்களின்உரிமைகள் தொடர்பான அழுத்தங்களைக் கொடுக்கவோ முடியும். பொது வேட்பாளர் தரப்புடன் சேர்ந்துகொண்டால் அந்த வாய்ப்பு இல்லாமல்போய் தமிழர்கள் நடுவீதியில்தான் நிற்வேண்டும்.

இவ்வாறுமத்தியகுழுக்கூட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டபோது, அங்கு தமிழ்பொதுவேட்பாளர்விடயத்திற்கு ஆதரவுக்குரல்தந்துவந்தவர்களான சிறீதரன், சிறிநேசன், குருகுலராஜா ஆகியோரும் அமைதியாகக் கேட்டுக்கொண்டுதான் இருந்தனர். அவர்களால் இதற்கு எதிர்க் கருத்துக்களை முன்வைத்து தமிழ் பொது வேட்பாளர் முடிவை நியாயப்படுத்த முடியவில்லை. ஆக மொத்தத்தில்தமிழ்பொதுவேட்பாளர் தமிழ் அரசுக் கட்சியை மீண்டும் மகுடத்தில் தூக்கி வைத்திருக்கிறார் என்பதுதான் யதார்த்தம். அரியேந்திரனால் தமிழர்களுக்கு நல்லது நடக்கிறதோ இல்லையோ அவர் இதுவரை சார்ந்திருந்த தமிழ் அரசுக் கட்சிக்கு நல்லது நடந்திருக்கிறது. அதுபோதும்தானே!

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜனாதிபதி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, மல்வத்து பீடத்தின் மகாநாயக்க வண. ஸ்ரீ சுமங்கல தேரரின் ஆசிர்வாதத்தைப் பெற்றுக்கொண்டபின்னர்தேரருடன் சிறு கலந்துரையாடலில் ஈடுபட்டார். தேரர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கினார்.

அதன் பின்னர் அஸ்கிரி மகா விகாரைக்குச் சென்ற செய்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க வண. வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரருடன் சிறு கலந்துரையாடலில் ஈடுபட்டார். அஸ்கிரி மகாநாயக்க தேரர் தலைமையிலான அஸ்கிரி பீடத்தின் மகா சங்கத்தினர், இதன்போது ஜனாதிபதிக்கு பிரித் பாராயணம்செய்து ஆசிவழங்கினர்.

மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ.கமகே, இராஜாங்க அமைச்சர்களான திலும் அமுனுகம, லொஹான் ரத்வத்தே, அனுராத ஜயரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அலுத்கமகே, குணதிலக்க ராஜபக்ச, தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம்பிரதானியுமானசாகல ரத்நாயக்க உள்ளிட்ட பலர் இந்தச் சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, 2024 ஆம் ஆண்டுஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்களைகையளித்ததன் பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மாலை மோதர கோவிலில் இடம்பெற்ற சமய நிகழ்வுகளில் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்.

## மேலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நவனந்த ஆகியோரோடு முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் மூன்று நாடாளுமன்றஉறுப்பினர்களும்கூட ஜனாதிபதிக்குத் தமது ஆதரவைத் தெரிவிக்கிறார்கள் என்று நேற்று செய்தியாளர்கள் மாநாட்டில் அறிவித்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக போட்டியிட்ட ரஷாத்தின் கட்சிக்காரர்களான அனுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இஷாக்ரஹுமான், புத்தளம்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் மற்றும் அம்பாறை மாவட்டநாடாளுமன்றஉறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் ஆகியோரே ஜனாதிபதிக்குத் தமது ஆதரவை அறிவித்துள்ளனர்.

அவர்களின் கட்சி மக்களின் கருத்துக்களைக் கேட்ட பின்னர் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்குஆதரவளிப்பதாகத் புதன்கிழமை தீர்மானித்தது. அதன்படி கட்சித் தலைவர் ரிஷாத் பதியுதீன் நேற்று சஜித் பிரேமதாஸவுக்குஆதரவுதெரிவித்து அவருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டார். அதே நேரத்தில் அவரது கட்சியைச் சேர்ந்த 3 நாடாளுமன் உறுப்பினர்களும் ஜனாதிபதிக்கே தமது ஆதரவு என்பதை அறிவித்தனர்.

திகாமடுல்லமாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ஸ்ரீயானி விஜேவிக்ரம, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குணசேகரம் சங்கர், ஐக்கிய மக்கள் முன்னணிகட்சித்தலைவர்கலாநிதி சிறிமசிறி ஹப்புஆராச்சி உள்ளிட்ட பல்வேறு கட்சி பிரதிநிதிகள், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் ஜனாதிபதியின் வெற்றிக்கு அர்ப்பணிப்பதாக உறுதியளித்தனர்.

## ஒற்றையாட்சியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்பை நீக்கி கூட்டாட்சி (சமஷ்டி) அரசமைப்பைக் கொண்டு வரும்படி தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் வலியுறுத்தி வரும் நிலையில், சிங்கள பௌத்த தேசியவாதத்தைத்திருப்திப்படுத்தும் விதத்தில் ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதாகநாமல்கூறியிருக்கிறார் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று வேட்புமனுவை சமர்ப்பித்ததன் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நபர்களை அடிப்படையாகக் கொண்டுநாங்கள்செயற்படவில்லை. கொள்கைகளைமுன்னிலைப்படுத்தி செயற்படுகிறோம். நாங்கள் செயற்படுகிறோம். அரசியலில் நண்பரும்இல்லைஎதிரியும்இல்லை என்பார்கள். ஆகவே எம்மைவிட்டுச் சென்றவர்கள் மீண்டும் எம்முடன் இணைவார்கள் என்றார்.

இதன்போது பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்பாக ஒன்றுக்கூடி நாமல் ராஜபக்ஷவை வரவேற்றார்கள். பட்டாசு கொளுத்தி தமது ஆதரவை வெளிப்படுத்தினார்கள். ஆதரவாளர்கள் மத்தியில் வந்த நாமல் ராஜபக்ஷ தேர்தலில் நிச்சயம் வெற்றிப்பெறும். சிறந்த மாற்றத்துக்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போம். இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்த்துள்ளோம். எமது வெற்றி அரசுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையும் என்றார்.

## நாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைத்தனர். ஆனால் சபாநாயகரும் நானும் நாடாளுமன்றத்தை முற்றுகையிட அனுமதிக்கவில்லை. பின்னர் அந்த நாடாளுமன்றம் என்னைஜனாதிபதியாகநியமித்தது. இராணுவம், பொலிஸ்மற்றும்விசேட அதிரடிப்படையினர் இணைந்து அன்றையதினம்நாடாளுமன்றத்தை பாதுகாத்தனர். இல்லையேல் இன்றைய பங்களாதேஷைப் போன்ற நிலைமையை நாம் சந்திக்க வேண்டியிருந்திருக்கும்.

எரிந்து கொண்டிருந்த நாட்டில் அந்த நிலைமையை தடுத்து இன்று நாட்டை முன்னோக்கி கொண்டு வந்துள்ளோம். அழிவைத் தடுக்க எதிர்க்கட்சிகள் எவரும் ஆதரவு வழங்கவில்லை. ஆளும்தரப்பைப் பதவி விலக சொல்லிவிட்டு அவர்களும் ஓடிவிட்டனர். ஆளும்தரப்புக்குப் புண்ணியமாய்ப் போக, இன்று ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைத்துள்ளது. அத்தகையவர்கள் ஆட்சியை பெறுவதற்குத் தகுதியானவர்களா? என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும். அவர்களிடம் நாட்டின் ஜனநாயகத்தை ஒப்படைக்க முடியுமா என்பதை தீர்மானிக்க வேண்டும்.

அன்று எரிபொருள் வரிசைகள்

தொடர்ச்சி 8ம் பக்கம்...



காலைக்கதிர் Kalaikkathir

# இந்தியாவின் 78 ஆவது சுதந்திர தினம் கொழும்பில் நேற்றுக் கொண்டாட்டம்

## வடக்கு மண்ணில் இறந்த இந்திய படையினருக்கு பலாலியில் அஞ்சலி





இந்தியாவின் 78 ஆவது சுதந்திர தினம் நேற்று (வியாழக்கிழமை) நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொண்டாடப்பட்டது. அந்த வகையில் கொழும்பில் நடைபெற்ற இக்கொண்டாட்டங்களின் பிரதான நிகழ்வு இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது இந்திய தேசியக்கொடியினை ஏற்றிவைத்த இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அணிவகுப்பு மரியாதையையும் பார்வையிட்டிருந்தார். அத்துடன் 78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்திய குடியரசுத் தலைவரால் நாட்டு மக்களுக்காக ஆற்றப்பட்ட உரையின் சுருக்கங்களும் உயர்ஸ்தானிகரால் இச்சந்தர்ப்பத்தில் வாசிக்கப்பட்டது.

பல்வேறு கலை நிகழ்வுகள் இக்கொண்டாட்டங்களுக்கு மேலும் உயிர்ப்பூட்டியிருந்தன. இலங்கை கடற்படையின் இசைக்குழுவினர், தேசப்பற்றையும்வீரத்தையும்பிரதிபலிக்கும் மெல்லிசை மெட்டுகளை இங்கு இசைத்திருந்தனர். இதேவேளைஇந்தியாவிலிருந்துவருகைதந்திருக்கும்கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவையின் கலைஞர்களான ரஞ்சித் கோகோய் தலைமையிலான கலைஞர்களின் ஓர் ஆத்மார்த்தமான பிஹு நடன ஆற்றுகை விருந்தினர்களை கவர்ந்திருந்தது.

அத்துடன், இலங்கையின் சமாதானம் மற்றும் ஐக்கியத்தை நிலை நிறுத்துவதற்காக அதியுயர் தியாகம் செய்த இந்திய படையினரை நினைவுகூரும் இந்திய அமைதி காக்கும் படையினரின் நினைவுத்தூபியில் உயர்ஸ்தானிகரும் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் ஏனைய அதிகாரிகளும் அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை கண்டியில் உள்ள உதவி உயர்ஸ்தானிகராலயம் யாழ்ப்பாணத்தில் உள்ள கொன்சுலேட் ஜெனரல் காரியாலயம் மற்றும் அம்பாந்தோட்டையில் உள்ள கொன்சுலேட் ஜெனரல் காரியாலயம் ஆகியவையும் இந்திய சுதந்திர தின விசேட நிகழ்வுகளை ஒழுங்கமைத்திருந்தன.

நேற்று முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரையான நான்கு நாள்கள் நடைபெறும் பாரத் ஸ்ரீலங்கா மைத்ரி உத்சவ் 2024 கொழும்பில் உள்ள சுதந்திர சதுக்க பூங்காவில் நேற்றுப் பிற்பகல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்விழாவில் இந்திய - இலங்கை கலைஞர்களின் பாரம்பரிய கைவினைப் பொருள்களைக் கொண்ட கண்காட்சி மற்றும் அதனுடன் இணைந்தகலாசாரநிகழ்வுகளும்உணவுகொண்டாட்டங்களும் நடைபெறவுள்ளன. இக்கண்காட்சி எதிர்வரும் 18ஆம் திகதி இரவு 10 மணி வரை பொதுமக்களுக்காக திறந்திருக்கும்.

இதற்கிடையே, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இடம்பெற்ற மோதல்களில் கொல்லப்பட்ட இந்தியப் படையினரின் நினைவாக பலாலி இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபிக்கு யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதுவர் அஞ்சலி செலுத்தினார்.



1987 ஆம் ஆண்டிலிருந்து 1990 வரை இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய இராணுவத்தினருக்கும் இடையே நடந்த மோதல்களில் கொல்லப்பட்ட இந்தியப் படையினரின் நினைவாக இந்தத் தூபி பலாலி இராணுவத் தளத்தினுள் அமைக்கப்பட்டுள்ளது. இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வில் யாழ்.. இராணுவ தலைமையகத்தின் உயரதிகாரிகள், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகத்தின் அதிகாரிகள் மற்றும் யாழ்ப்பாணத்திள்ள இராணுவத்தினர் கலந்துகொண்டனர்.(05)



# அநுராதபுரத்தில் விபத்து 19 பேர் காயமடைந்தனர்





அநுராதபுரம் - பாதெனிய பிரதான வீதியில் சிராவஸ்திபுர பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட 19 பேர் காயமடைந்துள்ளனர்என அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று(வியாழக்கிழமை) இடம்பெற்றுள்ளது.

ஆடை தொழிற்சாலையில் கடமையாற்றும் பெண்கள் பயணித்த பஸ் ஒன்று மாணவர்களை ஏற்றுவதற்காக வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாடசாலை பஸ் ஒன்றின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, பாடசாலை பஸ்ஸில் பயணித்த 4 மாணவர்களும் பஸ்சாரதியும்ஆடைதொழிற்சாலையின் பஸ்ஸில் பயணித்த 14 பெண்களும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள், அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, ஆடை தொழிற்சாலையின்பஸ்ஸின்சாரதிசந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களிற்கு சுயநிர்ணய உரிமைக்கான உரிமையுள்ளது

## இந்த விடயத்தில் ஏனைய கட்சிகளை போல ஐக்கிய சோசலிச கட்சி தடுமாறவில்லை என்கிறார் சிறிதுங்க



வடக்கு, கிழக்கில்வாழும் தமிழ்சமூகத்தினருக்குசுயநிர்ணயஉரிமைக்கானஉரிமையுள்ளது என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம் என தெரிவித்துள்ள ஐக்கிய சோசலிச கட்சியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் சிறிதுங்க ஜெயசூரிய இந்த விடயத்தில் கட்சி ஒருபோதும் ஏனைய கட்சிகளை போல தடுமாறியதில்லை என தெரிவித்துள்ளார்.

தேர்தல்களின்போதுசிறுபான்மை இனத்தவர்களிடமிருந்து வாக்குகளை பெறுவதற்காக கருவியாக 13 ஆவது திருத்தம் பயன்படுத்தப்படுகின்றது.

பார்வையாளர்களின் மனவிருப் பத்திற்கு ஏற்ப அரசியல்வாதிகள் அவ்வப்போது தங்கள் நிலைப்பாட்டை மாற்றிவருகின் றனர். எனினும் ஐக்கிய சோசலிச கட்சியை சேர்ந்த நாங்கள் நிலையான உறுதியான கொள் கையை கொண்டுள்ளோம்.

வடக்குகிழக்கில் வாழும் தமிழ் சமூகத்தினருக்கு சுயநிர்ணய உரிமைக்கான உரிமையுள்ளது என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம்.

எங்களின் இந்த நிலைப்பாட்டிற்கு நாட்டின் சில பகுதிகளில் ஆதரவில்லாமல் இருக்கலாம்,ஆனால் இதுநியாயமானது நீதியானது என நாங்கள் கருதுகின்றோம்.

தற்போதைய 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது குறித்து வடக்குகிழக்கு மக்கள் அதிக ஆர்வம் கொண்டுள்ளனர் என நாங்கள் கருதவில்லை.

அவர்களின் கரிசனைகளிற்கு தீர்வை காணும் நீண்டகாலதீர்வே அவர்களிற்கு அவசியம்.

தமிழ்மக்களிற்கு சுயநிர்ணய உரிமையைவழங்குவது நாட்டை பிளவுபடுத்தும் என நாங்கள் கருதவில்லை.மாறாக அது மேலும் ஐக்கியப்பட்ட நாட்டைஉருவாக்கும் என நாங்கள் கருதுகின்றோம்.

ஸ்கொட்லாந்து போன்ற நாடுகளில் இதுவே வரலாறு.

இந்த விடயத்தில் ஏனைய கட்சிகளை போல ஐக்கிய சோசலிச கட்சி தடுமாறவில்லை.

உதாரணத்திற்கு ஜேவிபி ஒரு காலத்தில் 13 வது திருத்தத்தை கடுமையாக எதிர்த்தது அதற்கு எதிராக வன்முறைகளை கூட பயன்படுத்தியது.

ஆனால் அவர்கள் தற்போது தங்கள் நிலைப்பாட்டை மாற்றிவிட்டனர்.தாங்கள் முன்னர் எதிர்த்த கொள்கையை நடைமுறைப்படுத்துவோம்எனதற்போதுதெரிவிக்கின்றனர்.

இந்த நிலையான தன்மையின்மை அரசியல்கட்சிகளின் இரட்டை வேடத்தை வெளிப்படுத்துகின்றது. - என்றார்.(05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசுத் தலைவர் தேர்தலும் சமஷ்டி பற்றிய அறிக்கையும்

**தேர்தல் திருவிழா சூடுபிடித்துவிட்டது. வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டுவிட்டன. 40 பேர் கட்டுப்பணம் செலுத்தியிருந்தனர். என்றாலும் 39 பேர்தான் வேட்புமனு தாக்கல் செய்தனர். அவர்கள் அனைவரது மனுக்களும் ஏற்கப்பட்டுவிட்டன. கடந்த தடவை அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டவர்களைவிட 6 பேர் அதிகமாக இந்தமுறை போட்டியிடுகிறார்கள்.**

**இவ்வளவு பேர் போட்டியிட்டாலும் மக்களுக்கு நன்கு தெரிந்த, அவர்களால் ஆதரவளிக்கப்படுவார்கள் என்று நம்பப்படுபவர்கள் என்னவோ மூன்று நான்கு பேர்தான். இந்தப் பந்தயத்தில் இப்போதுவரைக்கும் முன்னணியில் ஓடும் குதிரைகள் அவர்கள்தான். கடைசி நேரத்தில் பின்னால் இருந்து ஒரு குதிரை முன்னேறிவருவதற்கான வாய்ப்புக்கள் எல்லாம் இந்தப் பந்தயத்தில் இல்லை.**

**இதுவரைக்கும் அரசுத் தலைவர் தேர்தலில் இரண்டு பேர்தான் முதன்மை வேட்பாளர்களாக இருந்திருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர் அதிக வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றிபெறுவார். ஆனால் இந்தமுறை நிலமை சற்று மாறி இருக்கின்றது. முன்னணியில் குறைந்தது மூன்று பேர் இருக்கிறார்கள். ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுரகுமார திஸநாயக்க ஆகிய அந்த மூவருக்கும் போட்டியாக இளம் ராஜபக்சவான நாமலும் களத்தில் இருக்கிறார். குறைந்தபட்சம் முதல் மூவரில் மூன்றாவதாக வருபவருக்காவது நாமல் சவால் அளிப்பார் என்ற எதிர்பார்ப்பு உண்டு.**

**பாரம்பரியமான கட்சிகளின் சிதைவு, கவர்ச்சிகரமான தலைவர்கள் இல்லாமை, தவறுகள் நடந்த காலத்தில் பார்த்த முகங்களுக்கு உரியவர்களே இந்தமுறையும் போட்டி என்று பல காரணங்களால் எந்த ஒருவரையும் மக்கள் அள்ளுகொள்ளையாக ஆதரிக்கும் நிலமை இப்போதைக்கு இல்லை. அரசுத் தலைவர் தேர்தல் மட்டுமல்ல அதைத் தொடர்ந்து எப்படியும் நாடாளுமன்றத் தேர்தலும் வந்துவிடும் என்பதால் இந்த அரசுத் தலைவர் தேர்தல் கணக்குகள் நாடாளுமன்றத் தேர்தலோடும் பின்னிப் பிணைந்திருக்கின்றன. எனவேதான் ஒரு குழப்பகரமான சூழல் தொடர்ந்தும் நிலவுகின்றது.**

**அதிகாரத்தைப் பிடிப்பதற்கான இந்த மோதலில் ஏற்கனவே இருந்தவர்களே மீண்டும் போட்டியிடுவதால் மக்களுக்கும் சலிப்பும் விரக்தியும் அதிகளவில் இருக்கின்றது. அவர்களை வாக்களிப்பு நிலையங்கள் நோக்கி ஈர்ப்பது அடுத்துவரும் ஒரு மாத காலப் பகுதியில் வேட்பாளர்களின் பரப்புரைகளில்தான் தங்கியிருக்கின்றது. கட்சிகளினதும் சுயாதீன வேட்பாளர்களினதும் தேர்தல் அறிக்கைகள் இன்னும் வெளிவரவில்லை. அவை வெளிவந்தால்தான் யாரை ஆதரிப்பது என்பதை மக்களால் தெளிவாக முடிவு செய்ய முடியும். குறிப்பாக பெரும்பாலான தமிழ் மக்கள் அந்த அறிக்கைகளுக்காகத் காத்திருக்கின்றார்கள்.**

**கூட்டாட்சிக்கு யார் இணங்கி வருகின்றார்கள் என்பதைத் தமிழர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். அதில் தேசிய மக்கள் சக்தி அதனை அறிவிக்காது என்பது திண்ணம். பிரச்சினைகளுக்கான தீர்வாக அவர்கள் புதிய அரசமைப்பு என்பதைத்தான் முன்வைப்பார்கள் என்று அடித்துச் சொல்லலாம். தமக்கான காலம் முகிழ்ந்துவரும் இந்த நேரத்தில் சமஷ்டி பற்றிப் பேசி சிங்கள மக்களிடம் தமது ஆதரவைக் கெடுக்க அவர்கள் தயாரில்லை. சமஷ்டிக்கு சிங்கள மக்களைத் தயார்ப்படுத்தவில்லை என்பது அவர்களின் வாதம். ஆனால் சமஷ்டிக் கூறுகளை புதிய அரசமைப்பின் ஊடாக ஏற்க அவர்களும் தயார்தான்.**

**ரணில் மற்றும் சஜித் இருவரில் ரணிலும்கூட சமஷ்டியை வெளிப்படையாக அறிவிக்க வாய்ப்புகள் இல்லை. வெற்றி வாய்ப்பே மிக மந்தமாக இருக்கும் நிலையில், இருக்கும் ஆதரவையும் இழக்கும் வகையில் எந்தவொரு தரப்புக்கும் எந்தவொரு உறுதியான வாக்களிப்பையும் வழங்க அவரும் தயாரில்லை. தனது வெற்றி வாய்ப்பை அதிகரிக்க அனைவரையும் சமாளித்து என்ன செய்ய முடியும் என்பதுதான் அவரது இலக்கு. எனவே பொருளாதார அபிவிருத்தி தொடர்பில்தான் அவரது தேர்தல் அறிக்கையில் அதிகம் பேசப்படும் என்று எதிர்பார்க்கலாம்.**

**நாமல் ஏற்கனவே பௌத்த சிங்களத் தீவிரவாத வாக்குகளை இலக்குவைப்பதுதான் தனது நோக்கம் என்பதை தனது கருத்துக்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். ஒற்றையாட்சியை பாதுகாப்பது தன்னால்தான் முடியும் என்று சொல்லியிருக்கின்றார். சுமந்திரனுடன் பேசும்போது நல்லாட்சிக் காலத்து அரசமைப்பு முயற்சியைத் தொடரலாம் என்று அவர் சொன்னாலும் சமஷ்டி, அதிகாரப் பகிர்வுக்கு எதிரான சிங்கள மக்களின் உணர்வுகளைத் தூண்டி வாக்காக்குவதுதான் அவரது நிகழ்ச்சி நிரல் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.**

**இந்த மூவரும் சமஷ்டி பற்றி பேசாத நிலையில் சஜித் அதைப் பேசுவார் என்று எதிர்பார்க்க முடியாது. தேர்தல் களத்தில் இப்போது வரைக்கும் முதலாவதாக இருக்கிறார் என்று கருதப்படும் அவருக்கு தமிழ் மக்களின் வாக்குகள் மிக மிக அவசியம் எனவே சமஷ்டியை அவர் நேரடியாகத் தனது அறிக்கையில் குறிப்பிடாமல் கடந்த முறை தேர்தல் அறிக்கைக்கு ஒத்ததாக சளாப்பல் அறிக்கை ஒன்றையே அவரிடம் இருந்தும் எதிர்பார்க்க முடியும்.**

**ஆக மொத்தத்தில் எந்த வேட்பாளரிடம் இருந்தும் சமஷ்டி குறித்த தெளிவான அறிவிப்போடு கூடிய அறிக்கையை எதிர்பார்க்க முடியாத நிலையில் தமிழர்கள் என்ன செய்வார்கள்? அடுத்த ஒரு மாத காலம் தமிழர்களுக்கும் அக்கினிப் பரீட்சைதான்.**

# யானை படுத்தாலும்.....!

**என் சத்திய மூர்த்தி**

சாதாரண காலங்களில் பத்திரிகைகளில் முதல் பக்க முக்கிய செய்தியாக உருவெடுக்கும் சுமந்திரன்,-சாணக்கியன் ஆகியோரின் சீன தூதுவருடனான சந்திப்பும், தற்போதைய தேர்தல் திருவிழா காரணமாக காணாமலே போய்விட்டது. தமிழ் அரசு கட்சியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தூதுவர் குயி ஷென்ஹோனுடன் எது விடயமாக பேச்சு நடத்தினர், இல்லாத கட்சித் தலைமை அவர்களுக்கு அவரை சந்திக்க அனுமதி அளித்திருந்ததா, என்பன போன்ற தொடர் கேள்விகளுக்கும் இடமில்லாமல் போய்விட்டது.

அந்த விதத்தில், சம்மந்தன் ஆகட்டும், தற்போது சுமந்திரன் ஆகட்டும், சர்வதேசம் அவர்களை அறிந்திருந்த அளவிற்கு, சொந்த மக்கள் அவர்களை அணுகி அரசியல் செய்தனர் என்று செய்திகள் இல்லை. இன்னும் சொல்லப்போனால், தமிழ் அரசு நாடாளுமன்ற உறுப்பினர்களில், கட்சியின் மரபு-பரம்பரை மற்றும் சின்னத்தை முன்னிறுத்தி தேர்தலில் வெற்றிபெற்றவர்களில் இந்த இருவரும் முன் வரிசையில் நிற்பவர்கள்.

என்றாலும், முன்பு சம்மந்தன், தற்போது சுமந்திரன் ஆகிய இருவரும் தமிழ் அரசியல் பரப்பில் தவிர்க்க முடியாத இடத்தை பிடித்துள்ளது அவர்களது சாமர்த்தியத்தால், அல்ல. மாறாக,



ஏன் வழமையான, பத்திரிகை கிசுகிசு பத்திகளிலும் கூட சுமந்திரன்-சாணக்கியன் பெயர்கள் எதிர்பார்த்த அளவிற்கு இது விடயத்தில் அடிபடவில்லை. குறிப்பாக, நட்பு நாடான இந்தியா, இந்த தேர்தல் கால சந்திப்பை எப்படி பார்க்கிறது என்று எந்தவிதமான செய்தி கட்டுரைகளோ, ஆசிரியர் தலையங்கங்களோ, இதுவரை இடம்பெறவில்லை.

அதற்காக, குறிப்பாக சுமந்திரன் செய்திகளில் இருந்து காணாமல் போய்விட்டார் என்பதல்ல பொருள். மாறாக, ஞாயிற்றுகிழமை, வவுனியாவில் கூடிய தமிழ் அரசு கட்சியின் விவாதங்களுக்கு பின்னரான முடிவுகள் குறித்த பத்திரிகையாளர் சந்திப்பில், சுமந்திரனுக்கே முக்கிய இடம் வழங்கப்பட்டிருந்தமை, உடனடியாகவே சமூக வலைதளங்களில் அலசப்பட்டது.

ஒரு புறம் கட்சியின் தற்காலிக தலைவரான மூத்தவர் மாவை சேனாதிராசா, மறுபுறம் முதன்மை துணைதலைவர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோருக்கு நடுநாயகமாக சுமந்திரன் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கட்சியின் நிலைபாடுகளை விவரித்தது செய்திப் பொருளானது. அதுவே விவாதப் பொருளாகவும் மாறியது.

கட்சியின் பேச்சாளர் என்ற பதவியை மட்டுமே பெற்ற சுமந்திரன் எப்படி கட்சியின் நடுநாயக தலைவராக மாறிவிட முடியும், என்பது குறித்தே சமூக வலைதள சர்ச்சைகள் தொடர்ந்தன. அவர்கள் சொல்லாமல் விட்டது, சம்மந்தன் இல்லாத தமிழ் அரசுக் கட்சிக்கு அடுத்த தலைவராக சுமந்திரன் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டாரா, என்பது முக்கிய விவாத பொருளானது.

### ஏற்புடைமை திறன்

தமிழ் அரசு கட்சி தலைவர்கள் மற்றும் பரந்துபட்ட தமிழ் அரசியல் பரப்பில் தவிர்க்க முடியாத ஒருவராக சுமந்திரன் அவதாரம் எடுத்து கனகாலம் ஆகிவிட்டது. மனத்தால், வாக்கால், காயத்தால் அவரை எதிர்க்கும் பிற தமிழ் தலைவர்களும், அவர் அளவிலான ஆளுமை தங்களில் எவருக்கும் இல்லை என்று உணர்ந்து செயல்பட்டு வருவதாகவே தோன்றுகிறது.

எவ்வளவுக்கு எவ்வளவு தமிழர் பிரச்சினைக்கு சர்வதேசத்தின் அனுசரணையுடனும் உதவியிடனும் மட்டுமே பேச்சு மூலம் முடிவு காணப்படும் என்ற கருத்து தொடருகிறதோ, அப்போதே, சுமந்திரனின் அவசியமும் ஆளுமையும் முக்கியமாகி விடுகின்றன. என்ன, சர்வதேசத்தின் பங்களிப்பு இல்லாமலே தமிழர் தலைமை, தென்னிலங்கை அரசியல் தலைமைகளுடன் ஒட்டாடி உறவாடி, இனப்பிரச்சினைக்கான தீர்வை பெற்றுக்கொள்கிறதோ, அப்போதே சுமந்திரன், ஏன், காலம்சென்ற சம்மந்தன் போன்றோரின் தேவை குறைந்து போய்விடுகிறது. அல்லது, இல்லாமலே ஆக்கப்படுகிறது.

அவர்களது தெளிவான சிந்தனை, தொலைநோக்கு பார்வை, அறிந்த கருத்துக்களை குழப்பமில்லாமல், சர்வதேசம் மற்றும் தென்னிலங்கை உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமும் எடுத்துரைக்கும் சாகசம் ஆகியவற்றின் மூலமே. சுமந்திரனின் அரசியல் முதலீடு அதுவே.

அதேசமயம், தற்போது சுமந்திரன் ஆகட்டும் முன்னர் சம்மந்தன் ஆகட்டும், அவர்கள் தமிழ் மக்களிடையே பிரபலமான, அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர்களா, என்று கேள்வி எழுப்பினால், அதன் பதில் குழப்பமாகவே இருக்கும். இன்றளவும், தமிழ் மக்களிடையே, அவர்களுடைய ஏற்புடைமை திறன், தென்னிலங்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கேவின் அளவிற்கே உள்ளது என்று வாதிடுவோர் உள்ளனர்.

### அகலபாதாளம்

ஆனால், இன்றைய தமிழ் அரசு கட்சியின் நிலைமையும் நிலைபாடும்தான் என்ன? கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ் அரசு கட்சியையும் சம்மந்தனையும் காணமால் ஆக்குவதற்காக கச்சைகட்டிப் புறப்பட்ட செல்வம் அடைக்கலநாதன் போன்றோரும் காணாமல் போய்கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மை.

அதிலும் குறிப்பாக, தமிழ் அரசின் ஆளுமை இடைக்காலத்தில் குறைந்து போய் இருந்தாலும், தற்போது, மீண்டு எழுவது போன்ற ஒரு தோற்றம் உருவாகி வருகிறது. அதற்கும், தமிழ் அரசின் உள்கட்சி விவாதங்களும், வெளிமட்டத்தில் தமிழ் அரசியல் பரப்பில் தோன்றிவரும் மாறுதல்களுமே காரணம்.

அதாவது, யானை படுத்தாலும் குதிரை மட்டம் என்று கூறுவது போல், தமிழ் அரசு வீழ்ந்தாலும், அதனை விட அகலபாதாளத்தில், பிற தமிழ் கட்சிகள் வீழந்துள்ளன என்பதே உண்மை. இதற்கு தமிழ் அரசை குறைகூறி தப்பித்துக் கொள்ளமுடியாது. மாறாக, தமிழ் தேசிய கூட்டமைப்பு என்று தற்போது காணாமல் ஆக்கப்பட்ட அமைப்பு, இவர்களுடைய குறைகளை மறைத்து வந்திருக்கிறது என்பதும் உண்மை.

குறிப்பாக, தற்போது ஜனாதிபதித் தேர்தலுக்கான பொதுவேட்பாளர் விடயத்தில் தோன்றி உள்ள குழப்பத்திற்கு, தமிழ் சமூகம் யாரைக் குறைகூறுவது? அதாவது, தமிழ் அரசியல் குறித்தும், ஜனாதிபதித் தேர்தல் குறித்தும், இளம் தலைமுறையினர் யாருக்காவது ஆர்வமோ, அக்கறையோ இருக்கிறதா?

இன்றளவும், தமிழ் அரசியல் தலைமைகள், கடந்த தலைமுறையினரைச் சுற்றியே செயலாற்றிவருகிறது. ஒன்றில் இந்தத் தலைவர்கள் அனைவருக்குமே வயது-மூப்பு தோன்றிவிட்டது. அல்லது, இளைஞர்களாக

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர்
Kalaikkathir

# யானை படுத்தாலும்.....!

4ம் பக்க தொடர்ச்சி...........



இருக்கும் பட்சத்தில், அந்த தலைவர்கள், இனப்போருக்கு முந்தைய காலகட்டத்தில் தோன்றி, தற்போதும் பழைய பல்லவியை மட்டுமே பாடி, அரசியல் செய்து வருபவர்கள்.

இவர்களுக்கு, தங்களது வீட்டில் உள்ள அடுத்த தலைமுறையினரின் அரசியல் எதிர்பார்ப்புகள், அபிலாஷைகள் குறித்து எல்லாம் தெரியாது என்று கொள்ளவேண்டும். பின்னர் எப்படி, அவர்கள் பொதுவெளியில் தமிழர்களின் அடுத்த தலைமுறையினரையும் அவர்களது எதிர்பார்ப்புகளையும் புரிந்துகொண்டு, தங்களது பாதைகளை வகுத்துக்கொள்ளமுடியும்?

## குண்டுசட்டிக்குள் குதிரை

இந்தப்பின்னணியில்தான், தமிழ்பொதுவேட்பாளர் குறித்த பொதுகட்டமைப்பினையும் பார்க்க வேண்டும். இதில், உள்ள ஏழு அரசியல் கட்சிகளும் பழம் தின்று கொட்டை போட்டவை. இதன் காரணமாகவே, அவற்றின் தலைமைகளுக்கு தற்போது, குறிப்பாக இளம் தலைமுறையினரிடையே மரியாதையோ, செல்வாக்கோ இல்லாத நிலை தோன்றி உள்ளது.

பொதுக் கட்டமைப்பில் பங்குபெற்ற மற்ற ஏழு சமூக ஆர்வலர்களில் பலரும் கடந்த காலங்களில், விடுதலை புலிகள் அமைப்பினோடு தொடர்பு கொண்டவர்களாகவே பார்க்கப்பட்டனர். அவர்களுடைய சமகால கருத்தியலுக்கும் தமிழ்இளைஞர்களிடையே வரவேற்பு இல்லை. இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளாமல், அவர்களும் குண்டுசட்டிக்குள்தொடர்ந்து குதிரை ஓட்ட முடியாதா, என்று அங்காலய்த்து வருகிறார்கள்.

இதில் கொடுமையே, கொள்கை ரீதியாகவும் செயல்பாடுரீதியாகவும்இரு தரப்பினரும், வேறுவேறு பாதையில் தொடர்ந்து பயணித்து வருகிறார்கள். பொதுவேட்பாளர் அரசியல் கட்சியை சார்ந்தவராக இருக்கக்கூடாது என்று ஒரு சாரார் கூறிவந்தார்கள். ஆனால் தற்போதுஅரியநேந்திரனைபொதுவேட்பாளராகதேர்ந்தெடுத்தது அவர் சார்ந்த தமிழ் அரசு கட்சியை உள்வாங்கும் முயற்சியே என்று பொதுகட்டமைப்பில் பங்குபெற்றுள்ள பங்காளி அரசியல் கட்சிகள் வியாக்கியானம் அளித்துள்ளன.

அது போன்றே, தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுடன் ஒட்டோ உறவோ இருக்காது என்று சாரப்படும்படி சமூக அமைப்பினர் கருதிவந்தால், செல்வம், சித்தார்த்தன் போன்ற அரசியல் தலைமைகள், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கே, எதிர்கட்சி தலைவரும் வேட்பாளருமான சஜித் பிரேமதாசா ஆகியோரை தலைநகர் கொழும்பில் சந்தித்து எதிர்கால தீர்வுத் திட்டம் குறித்து பேச்சு நடத்தி உள்ளனர். கால்பந்தாட்ட சொற்பதத்தில் விளக்க வேண்டுமென்றால், இதுதான் 'சேம்-சைட் கோல்' போடுவது என்பது.

இதனையே தமிழ் அரசு கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு திருகோணமலை நீதிமன்றத்தில் அது குறித்த வழக்கு இருக்கும்போது, நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனும் செய்து வருகிறார். தமிழ் அரசு கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்படும் போதே, அவர் கட்சியின் மிதவாத அரசியலோடு தன்னை ஐக்கியபடுத்திக் கொள்ளாதவர் என்று பெயர் எடுத்தார்.

சிறீதரனின் அரசியல் மற்றும் கருத்தியல் சமகால தமிழ் சமூகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றே வைத்துக்கொள்வோம். ஆனால், அவர் கட்சியின் முந்தைய மத்திய குழுக் கூட்டம் முடிந்ததும், தமிழ் அரசு பொதுவேட்பாளர் பிரச்சினை குறித்து எந்தவித முடிவையும் எடுக்கவில்லை என்று கூறிவிட்டு, அடுத்த கூட்டத்திற்கு முன்னரே, அரியநேந்திரனின் பரப்புரையை தனது ஆளுகைக்கு உள்பட்ட கிளிநொச்சியில் அரங்கேற்றி உள்ளார்.

தமிழ் அரசின் மத்திய குழுவோ, முழு நாளும் பேச்சு நடத்திவிட்டு, தீர்வு திட்டம் குறித்து (வெற்றிவாய்ப்பு உள்ள) முக்கிய வேட்பாளர்களுடன் பேச்சு நடத்தப்போவதாக அறிவித்துள்ளது. எப்போது, தமிழ் பொது வேட்பாளர் வெற்றிக்காகப் போட்டியிடவில்லை என்று அறிவிக்கப்பட்டதோ, அப்போதே, அரியநேந்திரனுடன் தமிழ் அரசு கட்சி பேச்சு நடத்தப்போவதில்லை என்பதே பூடகமான முடிவு.

ஆனால், தமிழ் அரசின் வடக்கு-கிழக்கு மீள் இணைப்போடு சமஷ்டி முறை என்ற கோரிக்கைக்கு அரியநேந்திரன் மட்டுமே தலையாட்டுவார் என்பதே உண்மை. அப்படி என்றால், ஜனாதிபதி தேர்தல் குறித்து. தமிழ் அரசு மக்களுக்கு கூறவிருக்கும் முடிவுதான் என்ன? இதில் கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட சிறீதரனின் பங்களிப்புத்தான் என்ன?

சிறீதரன், முன்னர் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் மாநாட்டில் முக்கிய அதிதியாக கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர். தற்போதோ, வெளிநாட்டில் மருத்துவ சிகிச்சை பெற்றுவரும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொறுப்பை ஏற்றுக்கொள்ளப்போகிறார் என்று சமூகவலை தளங்களில் செய்தி அடிபடுகிறது.

இந்த வதந்திகளின் நம்பகத்தன்மை ஒருபுறம் இருக்கட்டும். ஆனால், தமிழ் சமூகத்திலேயே தொடர்ந்து செயலாற்றிவரும் மூத்த கட்சியின் மூன்றாவது தலைமுறை தலைவர் மருத்துவ சிகிச்சை பெற்றுவருகிறார் என்ற செய்தியை ஒட்டி, இவ்வாறான வதந்தியை சமூகவலைதளங்கள் பரப்புவது மனிதாபிமானமற்றது. கீழ்தரமானது. அவர்கள் மார் தட்டிக்கொள்ளும் தமிழர் கலாச்சாரத்தை அவமதிப்பதற்கு சமம்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




# சப்ர மஞ்சத்தில் எழுந்தருளும் முத்துக்குமார சுவாமி

ஈழத்து நல்லூரில் மஹோத்ஸவத்தில் பத்தாம் திருநாளில் இறைவன் செல்வ முத்துக்குமாரசுவாமியாக திருமஞ்சம் என்ற ரதத்தில் எழுந்தருள்கிறான்.

மஞ்சம் என்பது பள்ளியறையில் திகழ்வது ஆனால், இதுவோ இங்கு ஒரு ரத வடிவில் காணப்படுகிறது.

இந்த மஞ்ச பவனி இலங்கையில் குறிப்பாக வட புலத்துதலங்களில் உள்ள தனித்துவமான அம்சமாகும். இணுவில் கந்தசுவாமி கோயில் மஞ்சம் மிகவும் புகழ்பெற்றது. அபூர்வமான வேலைப்பாடுகளை உடையது. நூற்றாண்டு பழைமை வாய்ந்தது.

அவ்வகையில், நல்லூரிலும் தாயான தையல் நாயகியிடம் முத்தம் பெறும் குமாரன், தன் இரு தையல்களான வல்லி தேவசேனாவோடு சப்ர மஞ்சத்தில் எழுந்தருள்கிறான். இவ்வாண்டு அவனது புது முத்தங்கி அழகுக்கு அழகு சேர்க்கும். அவன் முத்துக் குமாரன் அல்லவா?

அவன் இப்போதெல்லாம் பிள்ளைப் பெருமானல்லவாம். விளையாட்டுப் பிள்ளை அல்லவாம். பொறுப்புணர்ச்சி உள்ளவனாம்.

அதனாலே, கேட்டோருக்கு கேட்ட வரம் தருவேன் என்று மஞ்சம் ஏறி மங்கையரோடு வந்தான் போலும்.

மிகவும் கட்டமைக்கப்பட்ட செம்மையான பரிபாலனம் நல்லூரில் இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் ஆலய பரிபாலனத்தில் ஒரு புரட்சி அங்கு நிகழ்கிறது.

நல்லூரில் பவனி வரும் மஞ்சம் பெரியதுமல்ல, சிறியதுமல்ல, ஆனால் அழகியது. தனித்துவமான வேலைப்பாடுகளை உடையது. பிரம்ம தேவனால் தூண்டப்படும் குதிரைகளை கொண்டது.

மஞ்சள்நிறமாலைப்பொழுதில்அந்தமங்கலகரமான மஞ்சப்பவனி... நடுவே முறுவலிக்கிறான் முருகன்...

இந்தநல்லூர்திருமஞ்சரதத்தில்பலசிற்பங்களையும் காண்கிறோம். அதில் ஒன்று வில்லேந்திய வேலவர்..

முடியாப் பிறவிக் கடலில் புகார், முழுதும் கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்படார், வெற்றிவேற் பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள், அவுணர் குலம் அடங்கப்
பொடியாக்கிய பெருமாள் திருநாமம் புகல்பவரே.
என்கிறார் அருணகிரிநாதப்பெருமான்.

எனவே, மீண்டும் சொல்வோம்! நீ இன்னமும் விளையாடக்கூடாது. உடனே எம்மை காப்பாற்ற வேண்டும்.

முன்னம் அன்னை முத்தம் சொரிந்து
அமுதளித்த காலமல்ல,
வன்மை கொள் அரக்கர் வலி அடக்கிய
வடி வேலுடைய அரசே!
அன்னமும் மஞ்ஞையுமாய் இருவர்
அருகிருந்த பின்னும்
இன்னமும் சின்னவன் தானா? எழில்
நல்லூரில் இருப்பவனே!

ஹேம மண்டித மந்திர நாயக
வம்ஸ விவர்க்கன சேவ பகே
காம பலப்ரத வல்லிமந: ப்ரிய
யோக ஸு வந்தித சக்தி பதே:
நாம பராயண நல்லை நிவாஸக
ரகு குரு பூஜித ஹ்ருஷ்டமதே
ஜய ஜய ஹே ஷண்முக ஸுந்தர
சிவ சரவணபவ குஹ பாலயமாம்

கவிக்குஞ்சர பாரதி எழுதிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழின் நிறைவுப்பாடல் முத்துக்குமாரனின் வழிபாட்டுச் சிறப்பை பேசும். அதை நாமும் பாடி அவனருள் வேண்டி பிரார்த்திப்போம்.

பங்கயம் திகழ்தகு சரவணைப் பொய்கை
மூழ்கில் பவத்திருளை நீக்கி வைக்கும்
படியில் நின் கிரியை பிரதட்சிணம் செய்திடில் பாக்கியங்கள் வந்தடுக்கும்
துங்கமிகுநின்பாதசேவைசெய்வோர்மனத்துயரங்கள் தனை அகற்றும்
துய்ய வெண்பொடி நுதலில் இட்டிடில் பிரபஞ்ச தோஷ சங்கைகள் பறக்கும்
தங்கு கிருத்திகை விரதம் உற்றவர்கள்பால் பிணிகள் சற்றும் அணுகாது காக்கும்
சஷ்டி விரதம் ஓம்பும் மலடிக்கு உன்னருள் புத்திர சந்ததி தனைக் கொடுக்கும்
மங்கல கல்யாண சுகுணங்கள் என் சொல்லுகேன் மோகவள்ளி குஞ்சரி மணாளா
வனசமலரயன் மதனையருள் சரச கோபால மருக சரவண முருகனே.

**ஸ்ரீ.சிவஸ்ரீ. தி. மயூரகிரிக்குருக்கள்**



## நாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த நாட்டில் இன்று எரிபொருள் வரிசைகள் இல்லை. உணவுக்கும் மருந்துக்கும் வரிசைகள் இருந்த நாட்டில் இன்று அந்த வரிசைகள் இல்லை. இப்போது மக்கள் கையில் பணம் இருக்கிறது. இப்போது மக்கள் வாழக்கூடிய நாடு உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் மக்களின் பிரச்சினைகள் முழுமையாக தீர்க்கப்படவில்லை. அதற்காக நான் வருந்துகிறேன்.

இந்த நாட்டின் அரசியல் தலைவர்கள் ஓடிவிட்டனர். பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்க யாரும் முன்வரவில்லை. ஆனால் இன்று இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து நாட்டை முன்னேற்றியுள்ளோம். நாடு வங்குரோத்தாகும் முன்பும்கூட மக்களுக்கு வழங்கப்படாத நிவாரணத்தை, வங்குரோத்தடைந்த காலத்தில் மக்களுக்கு வழங்கியுள்ளோம்.

மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அஸ்வெசும மற்றும் உறுமய வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. மேலும், கடந்த ஜனவரி மாதம் அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் சம்பள உயர்வு வழங்கப்பட்டது. அடுத்த ஆண்டு ஜனவரியில் மேலும் பத்தாயிரம் அல்லது பதினைந்தாயிரம் ரூபாவால் அதிகரிக்க எதிர்பார்க்கிறோம். நடுத்தர மக்களின் வரிச்சுமையை குறைக்கும் திட்டமும் எம்மிடம் உள்ளது. மேலும், அரச தொழில்வாய்ப்புகள் வழங்கும் பணிகளும் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தோம். தனியார் துறையிலும் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டில் கட்டியெழுப்பப்பட்டு வரும் பொருளாதாரத்தை நாம் அனைவரும் முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும். ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டம் இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு தொடரப்பட்டு இந்நாட்டு மக்களை வளப்படுத்தக்கூடிய புதிய பொருளாதாரம் நாட்டில் உருவாக்கப்படும்.

இன்று நாம் ஆரம்பித்துள்ள இந்த வேலைத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதன் மூலம் இந்நாட்டு மக்களின் எதிர்காலத்தை பாதுகாக்க செப்டம்பர் 21 ஆம் திகதி எனக்கு மக்கள் ஆணையை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நாட்டில் புதிய பொருளாதார மாற்றம் ஏற்படுத்தப்பட்டு இந்த நாட்டு மக்களுக்கு சிறந்த எதிர்காலம் கட்டியெழுப்பப்படும் - என்றார்.

பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு ஆதரவான தரப்பினர்கள் உட்பட ஏராளமான ஆதரவாளர்கள் இந்ச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டனர்.

## எந்தவொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் ரணில் விக்ரமசிங்கவை வெற்றிபெறச்செய்ய மக்கள் அணி திறளவேண்டும்.

அத்துடன் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் ரணில் விக்மரசிங்கவுக்கு ஆதரவளிக்க ஏனைய கட்சிகளில் இருந்து பலர் முன்வந்திருக்கின்றனர். இன்னும் பலர் வர இருக்கின்றனர்.

ஒருசில கட்சிகள் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்தாலும் அந்த கட்சிகளின் உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் ரணில் விக்ரமசிங்கவுடனே இருக்கின்றனர். அதேபோன்று ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கும் இன்னும் சிலர் எங்களுடன் கலந்துரையாடிக்கொண்டி ருக்கின்றனர். அவர்களும் எதிர்வரும் சில நாட்களில் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முன்வருவார்கள்.

மேலும், அண்மையில் ஆசிய நிறுவனம் ஒன்று மேற்கொண்டிருந்த கணிப்பீட்டிலும் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்த வேறு கணிப்பீடுகளின் அடிப்படையிலும் ரணில் விக்ரமசிங்கவே முன்னிலையில் இருக்கிறார்.

அதனால் ஜனாதிபதி தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்துள்ள 39 பேட்பாளர்களில் யாருமே ரணில் விக்ரமசிங்கவுக்கு சவாலாகப்போவதில்லை. ரணில் விக்ரமசிங்கவின் வெற்றி உறுதியாகும். அதனை யாராலும் தடுக்க முடியாது என்றார்.

## வேட்பாளர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லியனகே

05. பானி விஜேசிறிவர்தன
06. பிரியந்த புஷ்பகுமார விக்கிரமசிங்க
07. அஜந்த டி சொய்சா
08. பத்தரமுல்லை சிரலாதன தேரர்
09. சரத் பொன்சேகா
10. நுவன் சஞ்சீவ போபகே
11. ஹிட்டிஹாமிலாகே டொன் ஒஷால லக்மால் அனில் ஹேரத்
12. ஜனக பிரியந்த ரத்நாயக்க
13. கே.கே.பியதாச
14. மயில்வாகனம் திலகராஜா
15. சிறிபால அமரசிங்க
16. பாக்கியசெல்வம் அரியநேத்திரன்
17. சரத் கீர்த்திரத்ன
18. கே. ஆனந்த குலரத்ன
19. நாமல் ராஜபக்ச
20. அக்மீமன தயாரதன தேரர்
21. கே.ஆர். கிஷான்
22. பொல்கம்பொல ராலலாகே சமிந்த அனுருத்த
23. விஜயதாச ராஜபக்ச
24. அனுர சிட்னி ஜயரத்ன
25. சிறிதுங்க ஜயசூரிய
26. மஹிந்த தேவகே
27. மொஹமட் இல்லயாஸ்
28. லக்ஸ்மன் நாமல் ராஜபக்ச
29. அண்டனி விக்டர் பெரேரா
30. கீர்த்தி விக்கிரமரத்ன
31. சஜித் பிரேமதாச
32. ரணில் விக்கிரமசிங்க
33. மரக்கல மானகே பிரேமசிறி
34. லலித் டி சில்வா
35. பி. டபிள்யூ. எஸ். கே. பண்டாரநாயக்கா
36. டி.எம்.பண்டாரநாயக்க
37. அனுரகுமார திஸாநாயக்க
38. அகம்பொடி பிரசங்க சுரஞ்சீவ அனோஜ் டி சில்வா
39. அனுருத்த ரணசிங்க ஆராச்சிகே ரொஷான்

## தமிழ் அரசுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித் தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற வேட்புமனு கையளிப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழ் பொது வேட்பாளரான பா.அரியேந்திரன் சங்கு சின்னத்தில் போட்டியிடுகிறார். ஜனாதிபதித் தேர்தலில் கட்சி சார்பில் சிந்திக்காமல் தமிழ் மக்கள் சார்பில் சிந்திக்க வேண்டும். இதற்கான கட்டாயம் தற்போது தோற்றம் பெற்றுள்ளது.

கட்சி ரீதியில் முரண்பட்டுக் கொண்டிருக்காமல் தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்து சிந்தித்து ஒரு தீர்மானத்தை எடுக்கவேண்டும். தமிழ் மக்களின் அடையாளமாக பா.அரியேந்திரனை தேர்ந்தெடுத்துள்ளார்கள். இனி அவரை பற்றியோ, அவரின் கட்சி பற்றியோ பேசுவது அவசியமில்லை.

தமிழ் மக்களின் அடையாளமாக விளங்கும் அரியேத்திரனுக்கு சகல தமிழ் மக்களும் வாக்களிக்க வேண்டும். தமிழ் வேட்பாளர் விவகாரத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி உறுதியான தீர்மானத்தை எடுக்காமல் இருப்பது மன வருத்தத்துக்குரியது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கிறார்கள். வெளிப்படையாக இதனை குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் ஒரு சிறு தரப்பினர் இதனைத் தடுக்கிறார்கள். ஆகவே இவர்கள் தமது முரண்பாடுகளை விட்டுவிட்டு தமிழ் வேட்பாளருக்கு ஆதரவளிக்கவேண்டும் என்பதை கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கை தமிழரசு கட்சி உறுதியாக தீர்மானத்தை எடுக்கவேண்டும் என்பதைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

## தேர்தல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

ஆணைக்குழு அறிவித்துள்ளு விதிமுறைகள் வருமாறு:

ஒரு வேட்பாளருக்கு பாரபட்சம் காட்டுதல்: ஜனாதிபதி தேர்தல் தொடர்பான சட்டத்தின் 74ஆவது பிரிவின் கீழ், வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து வாக்குப்பதிவு முடியும் வரை, ஒரு வேட்பாளரை தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை அதிகரிப்பதற்காக மற்றொரு வேட்பாளருக்கு பாதகத்தை ஏற்படுத்தும் வகையில் பிரச்சாரங்கள், துண்டு பிரசுரங்கள் மற்றும் பிற பொருட்களை காட்சிப்படுத்தவோ அல்லது விநியோகிக்கவோ கூடாது.

இது தொடர்பில் அனைத்து வேட்பாளர்களினதும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இதற்கான சட்டப்பணிகளை மேற்கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு, பொலிஸ் மா அதிபருக்கு உரிய ஆலோசனை வழங்கியுள்ளது.

விளம்பர காட்சிப்படுத்தல்: தேர்தல் பிரசார விளம்பரங்கள் அல்லது பிற விளம்பரப் புகைப்படங்கள் அல்லது ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான சித்திர வாக்குச் சின்னங்கள், கொடிகள் மற்றும் பதாதைகள் ஆகியவை குறிப்பிட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு மட்டுமே கூட்டத்தின் ஒரு நாளில் நடைபெறும் இடத்திற்கு அருகில் அல்லது முறையாக அங்கீகரிக்கப்பட்ட அறிவிக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்களில் விளம்பரப்படுத்தப்படலாம்.

ஒலிபெருக்கிகளின் பயன் பாடு: தேர்தல் காலங்களில் வேட்பாளர்களுக்காக பரப்புரை செய்ய ஒலிபெருக்கிகளை பயன்படுத்தலாம், அதற்காக காவல்துறையின் முறையான அனுமதி பெற்றே ஒலிபெருக்கிகளை பயன்படுத்த முடியும்.

இலஞ்சம் அல்லது ஊழல் நடைமுறைகள் மற்றும் செல்வாக்கு: வேட்பாளருக்கு வாக்களிக்க ஏதாவது கொடுப்பது இலஞ்சமாக கருதப்படுகிறது.

அதன்படி, வாக்குகளைப் பெறுவதற்காக விருந்துபசாரம் செயதல், இலஞ்சம் வழங்குதல், தேவையற்ற அழுத்தங்கள் வழங்குதல் என்பன மோசடிச் செயல்களாகக் கருதப்படும்.

மேலும், வேட்பாளர்கள் மத நிகழ்ச்சிகள் அல்லது புனித இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள் மூலம் விளம்பரம் செய்யக்கூடாது. அந்த விளம்பரப்படுத்தல் தேவையற்ற செல்வாக்கின் கீழ் வருகின்றன.

பொதுச் சேவைகளின் செயல்திறன் மற்றும் பொதுச் சொத்தைப் பயன்படுத்துதல்: தேர்தல் காலத்தில், அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், வங்கிகள், சபைகள் போன்ற அரசியலமைப்பு நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களும் அரசாங்க நிறுவனங்களாக கருதப்படுகின்றன.

இந்த அரச நிறுவனங்களின் சொத்துக்களை ஜனாதிபதித் தேர்தலில் கட்சி வேட்பாளரை ஊக்குவிக்கவோ அல்லது பாரபட்சமாகவோ பயன்படுத்துவதற்கு கண்டிப்பாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்ட எந்தவொரு அதிகாரியும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வாக்களிப்பைத் தவிர வேறு எந்த அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியாது.

அரசியல் உரிமை உள்ள அரசு ஊழியர்கள் கூட அலுவலக நேரத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது: 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26 ஆம் திகதி திகதி வெளயிடப்பட்ட வர்த்தமானி மூலம் தேர்தல் ஆணைக்குழு பிறப்பித்த உத்தரவுகளை ஒவ்வொரு அரசு அதிகாரியும், ஊழியரும் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

இந்த உத்தரவுகளை அனைத்து அரசு அதிகாரிகளும் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழு, கடிதங்கள், வானொலி, தொலைக்காட்சி மற்றும் செய்தித்தாள்கள் மூலம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான காலம்: ஜனாதிபதி தேர்தல் முடிந்து ஒருவாரம் வரை பேரணிகளை நடத்த தடை விதிக்கப்படும்.

இவ்வாறான சட்டவிரோத பேரணிகளை நடத்தும் போது அதனை வீடியோவாக பதிவு செய்து நீதிமன்றில் வழக்குகளை பதிவு செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

## காட்டு யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு





வாழைச்சேனை கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் சின்னமியான்கல் வயல் பிரதேசத்தில் காட்டுயானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மாவடிவேம்பைச்சேர்ந்த (வயது - 62) வயதுடைய 5 பிள்ளைகளின் தந்தையான மா.சுப்பிரமணியம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

மாவடிவேம்பை பிறப்பிடமாகக் கொண்டாலும் தொழில் நிமித்தம் தமது மனைவியுடன் சின்னமியான்கல் கிராமத்தில் வசித்து வந்துள்ளார்.

புதன்கிழமை மாலை ஷவழக்கம் போல் மேய்ச்சலுக்கு சென்ற தமது மாடுகளை கூட்டி வரும்போது இருள் சூழ்ந்து காணப்பட்டதனால் வழியில் நின்ற யானை அவரை தாக்கியுள்ளது.

இவரது அழுகுரல் சத்தம் கேட்டு வாடியில்நின்றமனைவி கணவரை யானையின் தாக்குதலில் இருந்து காப்பற்ற ஓடியபோதும் முயற்சி பலனின்றிபோயுள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) உயிரிழந்தவரின் சடலம் வாழைச்சேனை ஆதாரவைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரண விசாரணைகளை மேற்கொண்டகோறளைப்பற்றுதிடீர் மரணவிசாரணைஅதிகாரிவடிவேல் ரமேஸ் ஆனந்தன் உயிரிழந்தவரின் சடலத்தை உடற்கூற்று சட்ட வைத்திய அதிகாரிக்கு கட்டளை பிறப்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.(05)

## ரயிலுடன் மோதி கார் கொஸ்கமவில் விபத்து

களனிவெளி ரயில் மார்க்கத்தில் கொஸ்கம, புதிய அம்பலம் ரயில் கடவையில் கார் ஒன்று ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக கொஸ்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

ரயில் கடவையின் காவலர் கடமையில் ஈடுபடாத காரணத்தினால் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ரயில் கடவைக்கு அருகில் பாடசாலையொன்று அமைந்துள் ளமையினால் பிரதேசவாசிகள் மிகவும் அச்சத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்த விபத்தின் போது காரில்நபரொருவர்இருந்துள்ள நிலையில், அவருக்கு எந்தவித காயமும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தின் போது காருக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக கொஸ்கம பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)




# தமிழ்ப் பொது வேட்பாளர் மக்களைப் பாதுகாக்கவா? தோல்வி அடைந்த விக்ரமசிங்கவைப் பாதுகாக்கவா?

## சந்திரசேகரன் கேள்வி




தமிழ் ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கான எண்ணத்தை மாற்றி தோல்வி அடைந்த ரணில் விக்ரம் சிங்கவை வெல்ல வைக்கும் முயற்சியாக அமைவதாக மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் குற்றச்சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் தமிழ்மக்களின் எதிர்பார்த்த கோரிக்கை அவர் ஊடாக பிரதிபலிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்டது.

இந்த உருவாக்கத்தின் பின்னணியில் சிவில் அமைப்புகள் புத்திஜீவிகள் பலர் பங்காற்றிய நிலையில் அவர்களுடன் இணைந்து பொதுக் கட்டமைப்பில் கையப்பமிட்ட தமிழ் அரசியல் கட்சிகள் ஜனாதிபதியிடம் ஓடிச் சென்று பேசிய நிகழ்வு கடந்த வாரம் இடம்பெற்றது.

தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நியமித்த நோக்கத்தை தாண்டி அதன் கட்டமைப்பை சிதைத்து தற்போதைய ஜனாதிபதியும் எதிர் வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்ததன் மூலம் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

ஐக்கியதேசியக்கட்சியின்வரலாற்றில் தமிழ் மக்களை அழித்த வரலாறுகளே அதிகமாக காணப்படுகின்ற நிலையில் தமிழ்கட்சிகள்ரணிலுடன்பேசுவதுதமது மக்களை ஏமாற்றும் ஒரு செயலாகும்.

1983 கலவரம், அவசரகால சட்டம் பயங்கரவாத தடைச் சட்டம், மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் மற்றும் யாழ் பொது நூலக எரிப்பு போன்றவற்றில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட போது இரசித்துக்கொண்டிருந்தவர் வேறு யாரும் இல்லை ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்கவே.

இவற்றையெல்லாம் மறந்த தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ரணில் விக்கிரமசிங்கவின் காலை நக்கி அரசியல் பிழைப்பை தக்க வைத்துக் கொள்வதற்கும் பணப்பெட்டி அரசியலை மேற்கொள்வதற்காகவா பேச்சுக்கு சென்றார்கள் என சந்தேகம் எழுகிறது.

ரணில் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்கிறேன் எனக்கூறி 83 பில்லியனாக இருந்த நாட்டின் கடனை சுமார் 100 பில்லியனாக மாற்றிய பெருமை ரணில் விக்கிரமசிங்கவை சாரும்.

ஊழலற்ற ஆட்சியை ஏற்படுத்துவதற்கும் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் தேசிய மக்கள் சக்தியுடன் நாட்டில் உள்ள மக்கள் ஒன்று சேர ஆரம்பித்துள்ளனர்.

ஆகவே தமிழ் மக்களை ஏமாற்றிய ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ் கட்சிகள் உறவை மேற்கொள்வது பொது வேட்பாளரை பாதுகாக்கவா அல்லது ரணில் விக்ரமசிங்கவை பாதுகாக்கவா என தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(05)

# இலங்கையின் தலையீடுகளினால் ஒருபோதும் பின்வாங்கமாட்டோம்!

## கனேடிய அரசு வலுவான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என பிரம்டன் நகர மேயர் வலியுறுத்தல்



இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசாங்கத்தால் எமது உள்ளக விவகாரங்களில் மேற்கொள்ளப்படும்தலையீடுகளால்நாம்ஒருபோதும் பின்வாங்க மாட்டோம் எனத் தெரிவித்திருக்கும் கனடாவின் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன், இத்தலையீடுகள் தொடர்பில் கனேடிய அரசாங்கம் வலுவானதொரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

புலம்பெயர் தமிழர்களால் கனடாவின் பிரம்டன் நகரில் தமிழினப்படுகொலை நினைவுத்தூபியை நிர்மாணிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் முயற்சி இலங்கையிலும், கனேடியவாழ் இலங்கையர்கள் மத்தியிலும் முன்னெடுக்கப்பட்டுவரும் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளில் பாரிய பின்டைவை ஏற்படுத்தும் எனவும், ஆகவே இம்முயற்சிக்குஉதவவேண்டாம்எனவும்வலியுறுத்தி பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுனுக்கு கனடாவின் ரொரன்டோ நகரிலுள்ள இலங்கை கொன்சியூலர் நாயகம் துஷார ரொட்ரிகோ கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இக்கடிதத்தின் உள்ளடக்கத்துக்குப் பதிலளிக்கும் வகையில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும்மேயர்பற்றிக் பிரவுன், ‘எமது உள்ளக விவகாரங்களில் இனப்படுகொலை புரிந்த இலங்கை அரசாங்கத்தால்மேற்கொள்ளப்படும் தலையீடுகளால் நாம் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம்’ எனத் தெரிவித்துள்ளார்.

‘தமிழினப்படுகொலை தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய குற்றவாளிகளைஇலங்கைஅரசாங்கம் ஹேக்நகரிலுள்ளசர்வதேச குற்றவியல்நீதிமன்றத்தில் கையளிக்கும் வரை உண்மையானநல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப முடியாது. இருப்பினும் இப்போர்க்குற்றவாளிகளை அவர்கள் இழைத்த மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறச்செய்வதற்குப் பதிலாக, இலங்கை அரசாங்கம் அவர்களைப் பாதுகாத்துவருகின்றது’ எனவும் மேயர் பற்றக் பிரவுன் விசனம் வெளியிட்டுள்ளார்.

அதேபோன்று இலங்கையில் தமிழ் மக்கள் அவர்களது அன்புக்குரியவர்களை நினைவுகூருவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முயற்சித்தாலும், கனடாவில் அவர்களால் (இலங்கை அரசாங்கத்தினால்) அதனைச் செய்யமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு‘அவர்கள் கனடாவில் நினைவுகூரல் நிகழ்வைத் தடுப்பதற்கு முயன்றால் அது வெளிநாட்டுத் தலையீடாகவே அமையும்’ எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அண்மையகாலங்களில் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் வெளியக தலையீடு தொடர்பில் கனேடிய அரசாங்கம் வலுவான நிலைப்பாடொன்றை எடுக்கும் என தான் எதிர்பார்ப்பதாகவும் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன் தெரிவித்துள்ளார். (05)

# ஜனாதிபதி தேர்தலுக்கான அச்சு நடவடிக்கைகள் இன்று ஆரம்பம்

ஜனாதிபதி தேர்தலுக்கான அச்சுப் பணிகள் இன்று (வெள்ளிக்கிழமை) முதல் தொடங்கப்படும் என அரசாங்க அச்சக அதிகாரி கங்கா கல்பானி லியனகே தெரிவித்துள்ளார்.

நேற்று வேட்பு மனுத் தாக்கல் நிறைவடைந்த பின்னர், தேர்தல் ஆணைக்குழுவின் ஒப்புதல் கிடைக்கப் பெற்ற பின் நாளை அரச அச்சகத்தில் தேர்தல் தொடர்பான அச்சுப் பணிகள் முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் கூறியுள்ளார். (05)

# 4 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் வியாபார நிலையம் உடைத்துத் திருட்டு!

பசறை நகரில் உள்ள வியாபார நிலையம் ஒன்றை உடைத்து 4 லட்சம் ரூபாவுக்கு மேல் பெறுமதியான பாக்கு, மிளகு, கருங்கா ஆகியன களவாடப்பட்டுள்ளன என பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

பசறைஹிங்குருகடுவவீதியில்பொது சந்தைக்கு அருகில் உள்ள வியாபார நிலையம் ஒன்றே உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர் எனத் தெரிவித்துள்ளனர்.(05)

# ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் ஒருகொடவத்தையில் கைதாகினர்

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஒருகொடவத்தை பகுதியில் போதைப்பொருட்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் புதன்கிழமை கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒருகொடவத்தைபகுதியில்வசிக்கும் 35 மற்றும் 53 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டசந்தேகநபர்களில், ஒருவரிடமிருந்து 150 கிராம் 600 மில்லிகிராம் ஐஸ் போதைபொருளும் மற்றையவரிடமிருந்து 12 கிராம் 720 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும்98,700ரூபாபணம்என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொழும்பு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியுடன் மோதியது மோட்டார் சைக்கிள்; ஒருவர் சாவு

குருணாகல், நாரம்மல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கடஹபொல - கட்டுபொத்த வீதியில் கடஹபொல பிரதேசத்தில் புதன்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக நாரம்மல பொலிஸார் தெரிவித்தனர்.

பரகஹகொடுவ, பஹமுனை பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியோரத்தில்நிறுத்திவைக்கப்பட்டிருந்த பார ஊர்தி ஒன்றின் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது, மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் படுகாயமடைந்துள்ள நிலையில் நாரம்மல வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக குருணாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர்உயிரிழந்துள்ளதாகபொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது,சடலம்குருணாகல் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நாரம்மல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# ஓட்டோ - டிப்பர் விபத்தில் மூவர் பலி; ஒருவர் காயம்



திவுலப்பிட்டிய - நீர்கொழும்பு வீதியில் துனகஹ நகரத்தில் இடம்பெற்ற விபத்தில் மூன்று பேர் உயிரிழந்துள்ளதுடன் பெண் ஒருவர் காயமடைந்துள்ளதாக திவுலப்பிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொதிகமுவயிலிருந்து துனகஹ நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்றும் திவுலப்பிட்டியில் இருந்து நீர்கொழும்பு நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது முச்சக்கர வண்டியில் பயணித்த மூவர் உயிரிழந் துள்ளதுடன் பெண் ஒருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த பெண் கொதிகமுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திவுலப்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# மண்முனை மேற்கில் மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டம்



மட்டக்களப்பு, மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேசத்தில் திறக்கப்படவுள்ள மதுபானசாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஒன்றிணைந்த சமூக மட்ட அமைப்பின் ஏற்பாட்டில் பிரதேச பொதுமக்கள் நேற்று (வியாழக்கிழமை) பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தஆர்ப்பாட்டம்மண்முனைமேற்கு,வவுணதீவு பிரதேச செயலகத்துக்கு முன்னால் இடம்பெற்றது. இதில் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், தமிழ் கல்வி அபிவிருத்தி ஒன்றியம், சமூக மட்ட அமைப்புக்கள் கலந்துகொண்டிருந்ததை பார்க்க முடிந்தது.



இந்த மதுபானசாலை ஆயித்தியமலை பகுதியில் திறக்கப்படவிருப்பதாகவும் இது திறக்கப்பட்டால் சமூக கலாசார சீர்கேடுகள், சமூக விரோத செயற்பாடுகள் அப்பகுதியில் இடம்பெறும் எனவும், பாடசாலை மாணவர்கள் பாதிப்புக்குள்ளாவார்கள் எனவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

'மட்டக்களப்பின் அபிவிருத்தி மதுபானசாலையா', 'அழிக்காதே அழிக்காதே கலாசாரத்தை அழிக்காதே', 'வேண்டாம் வேண்டாம் மதுபானசாலை வேண்டாம்' போன்ற கோசங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் அரசாங்க அதிபர், மதுவரித் திணைக்கள அதிகாரி போன்றோருக்கான பிரதியிடப்பட்ட மகஜர் ஒன்று மண்முனை மேற்கு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.(05)

# சட்டவிரோத மதுபானத்துடன் களுத்துறையில் ஒருவர் கைது

களுத்துறை வடக்கு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்பாத பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேக நபரொருவர் களுத்துறை பொலிஸ் ஊழல்தடுப்புபிரிவினரால்புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை , கல்பாத பிரதேசத்தில் வசிக்கும் 45 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 56 லீற்றர் (75 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர் களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை களுத்துறை வடக்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# தேர்தல் ஆணைக் குழு கோப்பிகடை போன்றது

## விஜயதாஸ சாட்டை

வேட்பு மனுதாக்கல் செய்யும் நடவடிக்கைகளின் போது தேர்தல் ஆணைக்குழுஒழுக்கம்கட்டுப்பாட்டை பேண தவறிவிட்டதாக தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் தேர்தல் ஆணைக்குழு நீதிமன்றம் போல காணப்படும். ஒழுக்கம் அமைதி பேணப்படும் எனத் தெரிவித்துள்ள அவர் இம்முறை அது 'கோப்பிகடை' போல காணப்படுகின்றது பல குழுக்கள் உருவாகியுள்ளன என விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின்முதல்பிரஜையாகவிரும்புபவர்களின்நடத்தைகள்கவலையளிக்கும் விதத்தில் காணப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒரு வேட்பாளரை வெற்றிபெறச் செய்வதற்காக பல 'டம்மி' வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர், ஒரு வேட்பாளருக்காக 15 முதல் 20 வரையிலான 'டம்மி' வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர், அவர்கள் காடையர்கள்போலநடந்துகொண்டனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



வேட்பாளர்கள் மத்தியில் ஒழுக்கத்தைப் பேணுவதற்குத் தேர்தல் ஆணைக்குழு முயலவேண்டும் என வேண்டுகோள்விடுத்துள்ளவிஜயதாஸ ராஜபக்ஷ, மக்கள் ஒழுக்கமான விதத்தில் நடந்துகொள்ளவேண்டும் என வேண்டுகோள் விடுப்பதற்கு முன்னர் நாங்கள் அவ்வாறு நடந்து கொள்ளவேண்டும்எனவேண்டுகோள் விடுத்துள்ளார்.(05)

# ஒகஸ்ட் மாதத்தின் முதல் 11 நாள்களில் 73,373 சுற்றுலாவிகள் இலங்கை வருகை

நாட்டில் இந்த வருடத்தில் ஒகஸ்ட் மாதத்தின் முதல் 11 நாள்களில் 73,373 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 1,271,432 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 237,649 ஆகும்.

ரஷ்யா, பிரித்தானியா, ஜேர்மனி, சீனா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

(05)

# குளவி கொட்டுக்கு இலக்காகி விவசாயி ஒருவர் உயிரிழப்பு

அநுராதபுரம், பரசன்கஸ்வெள பிரதேசத்தில்குளவிகொட்டுக்குஇலக்காகி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம், பரசன்கஸ்வெள , பலுகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த ஹெட்டி ஆராச்சிலாகே சுனில் என்ற 65 வயதுடைய விவசாயி ஒருவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தன்று, உயிரிழந்தவர் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு மதியம் வீடு திரும்பியுள்ள நிலையில், பின்னர் தனது வீட்டில் உள்ள குளவி கூடு ஒன்றை உடைக்க முயன்ற போது குளவி கொட்டுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார்.

இதனையடுத்து, காயமடைந்தவர் பரசன்கஸ்வெள பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# குளவிக் கொட்டுக்கு இலக்காகிய 7 தொழிலாளர் வைத்தியசாலையில்



நோர்வூட் பொலிஸ்பிரிவிற்குட்பட்ட பொகவந்தலாவ

கொர்க்கஸ்வோல்ட் கீழ் பிரிவு தோட்ட தேயிலை மலையில் தேயிலை பறித்து கொண்டிருந்த 7 தொழிலாளர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகி பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதானர் என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

15ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணி அளவில் இந்த சம்பவம்இடம்பெற்றதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ கொர்க்கஸ்வோல்ட் கீழ்ப்பிரிவு தோட்ட தேயிலை மழையில் மரம் ஒன்றில் இருந்த குளவி கூடு கலைந்து வந்து தொழிலாளர்களை தாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கல்முனை மாநகர வர்த்தக நிலையங்களில் பரிசோதனை

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் வருமான வாரத்தை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட வர்த்தக நிலையங்கள்மீதானகளப்பரிசோதனை நடவடிக்கை புதன்கிழமை பெரிய நீலாவணையில்மாநகரஆணையாளர் என்.எம். நௌபீஸ் தலைமையில் கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ்வின் நெறிப்படுத்தலில் வெற்றிகரமாக இடம்பெற்றது.

மூன்றாவது நாளாக நடைபெற்ற இக்களப்பரிசோதனைநடவடிக்கையில் மாநகரசபையின்உதவிஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.ஏ.எச். ஜெளஸி, பிரதம சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் அர்ஷாத் காரியப்பர், நிதி உதவியாளர் யூ.எம். இஸ்ஹாக், வருமானபரிசோதகர்களான ஏ.ஜே. சமீம், எம். உபைதுல்லாஹ், எம்.எம். ரைஹான், சுகாதாரப் பரிசோதகர்களான ஜே.எம். நிஸ்தார், எம்.எம். பாறுக், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான நாகரத்தினம், எம்.சி.எம்.நுஸ்ரத் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

கல்முனை மாநகர சபை ஆட்புல எல்லையினுள் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள்மாநகரசபையின்வியாபார அனுமதிப் பத்திரம் பெற்றிருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு வருமான வாரம் பிரகடனப்படுத்தப்பட்டு, கடந்த திங்கட்கிழமை தொடக்கம் அதற்கான களப்பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்போது வர்த்தக நிலையங்களில் வியாபார அனுமதிப் பத்திரம் பரீட்சிக்கப்பட்டு, இதுவரை இந்த ஆண்டுக்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றிராத வர்த்தக நிலையங்களின்உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் அப்பத்திரத்தை அவர்கள் இலகுவாக பெற்றுக் கொள்வதற்காக அதே இடத்தில் ஆரம்ப நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன் ஏற்கனவே வியாபார அனுமதிப் பத்திரம் பெற்றிருந்த வர்த்தக நிலையங்களுக்கும் புதிதாக அதனைப் பெறுவதற்காக கட்டணம் செலுத்தப்பட்ட வர்த்தக நிலையங்களுக்கும் 'நேர்த்தியான வரியிறுப்பு நிறுவனம்' எனும் வாசகம் பொறிக்கப்பட்ட ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு, காட்சிப்படுத்தப்பட்டன

அதேவேளைஉணவகங்கள்மற்றும் தொழிற்சாலைகளின்சுகாதாரம்மற்றும் சுற்றுச்சூழல்விடயங்களும்இதன்போது பரிசோதிக்கப்பட்டு, தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. குறிப்பாக சில உணவகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில்அவதானிக்கப்பட்ட சுகாதார மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு பணிக்கப்பட்டதுடன் கால அவகாசமும் வழங்கப்பட்டது.

(05)

# நுவரெலியாவில் தொடர் திருட்டில் ஈடுபட்டு வந்தவர்கள் மறியலில்

நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லபுக்கலை கொண்டக்கலை பகுதியைச் சேர்ந்த இருவர் ஏராளமான இடங்களில் பணம், நகை உட்பட பெருமளவிலான இலத்திரனியல் உபகரணங்களையும் கொள்ளையிட்ட திருடர்களை புதன்கிழமை கைதுசெய்துள்ளனர்.

குறித்த இருவரில் ஒருவர் 43 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை எனவும் இவரின் மனைவி வெளிநாட்டில் பணிபுரிந்து வருவதாகவும் மற்றொருவர் 29 வயதுடையவர் எனவும் குறித்த திருடன் பல திருட்டு சம்பவங்களில் தொடர்புடையவர் என்றும் இறுதியில் வலப்பனை நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் இவர் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர் எனவும் பல முறை விளக்க மறியலில் வைக்கப்பட்டவர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இறுதியில் ஒகஸ்ட் 13 திகதி இரவு நுவரெலியா லபுக்கலை குடாஓயா பகுதியில் உள்ள வீடொன்றில் ஜன்னலை உடைத்து உள்நுழைந்த இவ்விரு திருடர்களும் வீட்டில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த பணப்பையில் இருந்த 20 ஆயிரம் ரூபா பணத்தை திருடிச் சென்றதை ஒப்புக்கொண்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

எனினும் நுவரெலியா தலைமையக பொலிஸார் இரு திருடர்கள் வீட்டிலிருந்து திருடப்பட் அதிகமான இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் பல பொருடகளை கைப்பற்றியுள்ளதாகவும் இவற்றின் 5 இலட்சம் ரூபா பெறுமதியான திருட்டுப் பொருள்கள் அடங்குகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

மேலும் குறித்த சந்தேகநபர்கள் இருவரையும் வியாழக்கிழமை நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தியிருந்தனர். இதன்போது மேற்படி இருவரையும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்.மந்திரி மனையை புனரமைப்பு தொடர்பில் வடக்கு ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் சட்டநாதர்கோவிலைஅண்மித்துஅமைந்துள்ள மந்திரிமனையைப்புனரமைப்பதுதொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடத்தப்பட்டது.

வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம், வடக்கு மாகாண சுற்றுலாப் பணியக அதிகாரிகள், யாழ். மாநகர சபைஆணையாளர்,உள்ளூராட்சிதிணைக்கள அதிகாரிகள், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், மடம் அறக்கட்டளையின் பொறுப்பாளர் உள்ளிட்டோர் இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.





யாழ்ப்பாணஇராசதானிகாலத்துக்குரியதாக கருதப்படும் மந்திரி மனை, பாதுகாக்கப்பட வேண்டியதொல்பொருள்சின்னமாக 2011ஆம் ஆண்டு வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. எனினும், மந்திரி மனை அமைந்துள்ள காணி மடம் அறக்கட்டளைக்கு சொந்தமானதாகக் காணப்படுகிறது.

இந்நிலையில் மந்திரி மனையை புனரமைப்பதற்கு மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் பல சுற்றுப் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும், கலந்துரையாடலில் உரிய தீர்மானங்கள் எட்டப்படாமையால் காலதாமதம் ஏற்பட்டது.

இந்நிலையில், வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற இவ்விசேட கலந்துரையாடலின்போது சில விதிமுறைகளுக்கு உட்பட்டு மந்திரி மனையைப் புனரமைத்துப் பாதுகாப்பதற்கு மடம் அறக்கட்டளை பொறுப்பாளர் இணக்கம் தெரிவித்துள்ளார்.



தொல்பொருள் திணைக்களத்தின் திட்ட முன்மொழிவுக்கு அமைய, திணைக்கள மேற்பார்வையுடன் அறக்கட்டளையின் நிதியில் மந்திரி மனையை புனரமைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இணக்கப்பாட்டுக்கு அமைய தொல்பொருள்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான கோரிக்கை அடங்கிய கடிதம் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி பிராந்திய தொல்பொருள் திணைக்களத்தினூடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.08.2024இல் வெளியிடப்பெற்றது